சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் - 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு ஒன்றிய அரசின் ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினைச் செயல்படுத்த ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட 75% பங்கு தொகை ரூ. 3,08,00,000/- மற்றும் மாநில அரசின் 25% பங்கு தொகை ரூ.1,02,66,667/- சேர்த்து மொத்தம் ரூ.4,10,66,667/- தொகையை SNA SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-3)துறை

அரசாணை (ப) எண்.103

நாள் : 30.06.2026.
பராபவ வருடம்,
ஆனி மாதம் 16-ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2057.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (ப) எண்.233 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-3)துறை, நாள்:12.11.2025.
2. அரசு கடித ந.க.எண். 1921/ADW3/2026-1, நாள். 18.05.2026.
3. அரசு துணைச் செயலாளர் (பட்ஜெட்), நிதித் துறை, கடித எண் E-27/Finance (GBC/BGM)/2024, நாள். 06.05.2026.
4. ஒன்றிய அரசின் பழங்குடியின அமைச்சக கடிதம் எண் 12432/JS&FA/2026, நாள். 14.05.2026.
5. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண். பமே/ஏ1/3121/2026, நாள் : 22.06.2026.

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2025-2026 ஆம் கல்வியாண்டில் ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பழங்குடியின மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை வழங்க ரூ.3,72,38,000/- ஐ (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து இரண்டு இலட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும்) ஒப்பளிக்கப்பட்டு அத்தொகையினை இத்திட்டத்திற்கான தனித்த வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைத்து செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், பழங்குடியினர் மாணாக்கருக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் முந்தைய வருட (2025-26) நிலுவை மற்றும் 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு ஒன்றிய அரசின் பங்கு தொகை (75%) ரூ. 783.06 இலட்சம் கீழ்கண்டவாறு விடுவிக்குமாறு ஒன்றிய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது

	விவரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	2026-27 ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் செலவினம்	890.00
2.	மாநில அரசின் பங்கு (25%)	222.50
3.	ஒன்றிய அரசின் பங்கு (75%)	667.50
4.	2025-26 ஆம் ஆண்டிற்குரிய ஒன்றிய அரசின் பங்கு தொகை (75%)	115.56
5.	ஒன்றிய அரசின் மொத்த பங்கு தொகை (வ. எண்.3 + 4)	783.06

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2026-27 ஆம் ஆண்டிற்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்குத்தொகை (75%) ரூ.3,08,00,000/-னை (ரூபாய் மூன்று கோடியே எட்டு இலட்சம் மட்டும்) முதன்மை ஒப்புதலாக (Mother Sanction) பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

4. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர், ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட முதன்மை ஒப்புதலுக்கேற்ப (Mother Sanction), 2026-2027 ஆம் ஆண்டிற்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக மாநில அரசின் 25% பங்குத் தொகையாக ரூ.1,02,66,667/- தேவைப்படுகிறது எனவும், இதன் மூலம் மொத்தம் ரூ.4,10,66,667/- (ரூபாய் நான்கு கோடியே பத்து இலட்சத்து அறுபத்தாறு ஆயிரத்து அறுநூற்று அறுபத்தேழு மட்டும்) பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

முதன்மை ஒப்புதல் (Mother Sanction)	பங்குத் தொகை	தொகை (ரூ)
Pre-Matric Scholarship TN128	ஒன்றிய அரசின் பங்கு (75%)	3,08,00,000/-
	மாநில அரசின் பங்கு (25%)	1,02,66,667/-
	மொத்தம்	4,10,66,667/-

5. மேலும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி, 2026-27 ஆம் ஆண்டிற்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தினைச் செயல்படுத்த தேவையான தொகை, "DPC: 2225-02-277-UC-31201" என்ற ஒற்றை கணக்குத் தலைப்பின் கீழ் பெறப்பட்டு செலவிட அனுமதிக்கப்பட வேண்டும் என்பதால், ரூ. 4,10,66,667/-னை ஒற்றைக் கணக்குத் தலைப்பின் கீழ் மறு ஒதுக்கீடு (Re-appropriation) செய்து வழங்குமாறும் மற்றும் SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்து அரசாணை வெளியிடுமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசிடம் கோரியுள்ளார்.

6. மேலே பத்தி 5 இல் உள்ள பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினைச் செயல்படுத்த ஒன்றிய அரசின்

75% பங்கு தொகை ரூ.3,08,00,000/- மற்றும் மாநில அரசின் 25% பங்கு தொகையாக ரூ. 1,02,66,667/- சேர்த்து மொத்தம் ரூ. 4,10,66,667/- (**ரூபாய் நான்கு கோடியே பத்து இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தேழு மட்டும்**) பழங்குடியின மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை வழங்க விடுவித்து, அத்தொகையினை SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6 இல் அனுமதிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் 277 கல்வி - மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் UC பழங்குடியினர் மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு, கல்வி உதவித் தொகை -312-படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் - 01 - மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு,

IFHRMS DPC : 2225 - 02 - 277 - UC - 31201"

Centrally Sponsored Scheme Code and Name

Centrally Sponsored Scheme and Name	9272 – PRE MATRIC SCHOLARSHIP – TRIBAL
State Scheme Code and Name	TN128 – PRE MATRIC SCHOLARSHIP – TRIBAL – 9272[TN]
State Drawing Account No. In Reserve Bank of India	01512701457

8. மத்திய அரசின் நிதி சார்ந்த வழிகாட்டுதல்களின் படி கட்டாயமாக்கப்பட்டுள்ள SNA-SPARSH என்னும் புதிய நிதி தொகுப்பின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இத்திட்டத்தில், எந்த ஒரு கணக்குத் தலைப்பின் கீழ் 100 சதவீதம் நிதியை பெறுவதற்கு SNA-SPARSH platform பட்டியல் மூலம் IFHRMS-ல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இதில், மத்திய மற்றும் மாநில அரசின் பங்கீடானது கணினி வழியாக தன்னிச்சையாக பிறப்பிக்கப்படும் (இதன் பின்னர், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கென்று தனித்தனியான கணக்குத் தலைப்பு என்னும் முறை இல்லை).

9. இத்திட்டத்தின் கீழான, அனைத்து மாவட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் ஒப்புதல் அளிக்கப்படும் தொகையானது, அரசாணையில் அனுமதிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக இருக்க கூடாது என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும், அரசு கடிதம் 573, நிதி(PFMS)த் துறை, நாள்.06.01.2025 மற்றும் 17.02.2025-இல் வழங்கப்பட்டுள்ள SNA-SPARSH வழிகாட்டுதல்களை தவறாது பின்பற்றும்படியும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பத்தி 3.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை உறுதி செய்துகொள்ளும்படியும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.2673/ நிதி(ஆதி(ம)பந)துறை/2026. நாள்:30.06.2026 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

டாக்டர். என். சுப்பையன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை -600 005.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை -600 005.
மாநில கணக்காயர், சென்னை -600 0018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை -600 008.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

நகல்

மாண்புமிகு சமூகநீதித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் தனிச் செயலர், சென்னை -600 009.
நிதித் (ஆதி(ம)பந) துறை, சென்னை -600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

30/6/2026